2014 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 322, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

322—

பேருந்து வசதி

***30207—திரு. ஆர். சுந்தரராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், இடைக்காட்டூர் கிறிஸ்த்துவ தேவாலயத்திற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையம், ஆரப்பாளையம் மற்றும் மாட்டுத்தாவணியிலிருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஆரப்பாளையம் பகுதியிலிருந்து இடைக்காட்டூர் கிறிஸ்த்துவ தேவாலயத்திற்கு ஒரு பேருந்துமூலம் நான்கு நடைகளும், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு பேருந்துகள்மூலம் 24 நடைகளும், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு பேருந்துமூலம் 4 நடைகளும், ஆக மொத்தம் நான்கு பேருந்துகள்மூலம் 32 தனி நடைகள் நேரிடையாக இடைக்காட்டூருக்கு இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராசன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.